உதவி நிர்வாகமாக இருந்து வருகிறது என்று சொல்லப்பட்டு வருகிறது. 3 ஆண்டுக் காலமாக இடர் உதவி நிர்வாகமாக இருந்தாலும்கூட, இந்த ஆலை நிர்வாகம் இன்னும் சரிப்பட்டு வரவில்லை என்று நன்றாகத் தெரிகிறது. எனவே, இந்த நிலையைக் கருதி அரசே இந்த ஆலையை நேரடியாக எடுத்து நடத்திட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா நிலைகளையும் ஆய்ந்த பிறகே அரசு அந்த முடிவிற்கு வரும்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள் பராமரிக்கப்படாதது.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம், சைமன் காலனி, வாணியக்குடி, குறும்பனை பகுதிகளில் குடிநீர்க் குழாய்களெல்லாம் பழுதடைந்து சாக்கடை நீரும் குடி தண்ணீரும் ஒன்றாகக் கலந்து வருவதால் புதிய குடிநீர்த் திட்டம் உருவாக்குவது பற்றிய'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

வாணியக்குடி,—2,280 மக்கள் தொகையைக் கொண்ட இந்த குடியிருப்பு குறுத்தெங்கோடு ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். இக் கிராமத்தில் இருக்கும் திறந்த வெளிக் கிணற்றை ஆதாரமாகக் கொண்டு நீரேற்றுக குழாய்கள் மூலம் 5,000 காலன் நீர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் ஏற்றப்பட்டு குடிநீர் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த நீரேற்றும் குழாய்களில் சுமார் 200 மீட்டர் நீளத்திற்கு கசிவு ஏற்பட்டு உள்ளது. அதனை உடன் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.

ஒரு பாதுகாக்கப்பட்ட புது குடிநீர் திட்டம் ரூ. 3.72 இலட்சங்களுக்கு அங்கீகரிக்கப்பட்டு நடப்பு நிதியாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

1986 நவம்பர் 20] [திரு. க. இராசாராம்]

குறும்பனை :—2,160 மக்கள் தொகையைக் கொண்ட இந்த குடியிருப்பு குறுத்தெங்கோடு ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். இக் கிராமத்தில் திறந்த வெளி கிணற்றை ஆதாரமாகக் கொண்டு நீரேற்றும் குழாய்கள் மூலம் 5,000 காலன் கொள்ளளவுள்ள இரண்டு குடிநீர்த் தேக்கத் தொட்டிகளில் நீரேற்றப்பட்டு பகிர் மானக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. பகிர்மானக் குழாய்களில் சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு கசிவு ஏற்பட்டுள்ளது. அதை நிவர்த்தி செய்யவும் உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக் குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வாரியத் தால் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத் திற்கு நடப்பு நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல் படுத்தப்படும்.

சைமன் காலனி :—1,230 மக்கள் தொகையைக் கொண்ட இக்குடியிருப்பும் குருத்தெங்கோடு ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். இக் கிராமத்திலும் திறந்த வெளிக் கிணறு ஒன்றை ஆதாரமாகக் கொண்டு 5,000 காலன் கொள்ளளவுள்ள தரைமட்டத் தொட்டி யில் நீரேற்றப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த திட்டம் 20 வருடங்களுக்கு முன்னால் மீன் வளத் துறையினரால் நிறைவேற்றப்பட்டதாகும். இந்தத் திட்டத்தை மீண்டும் பரா மரிக்குமாறு மீன் வளத் துறையினரிடம் கொடுக்கப்பட்டுள்ள தென கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார். பராமரிப்பின் முக்கியத்துவத்தைக் கொண்டு, வேலைகள் உடன் மேற்கொள்ளுமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், வாணியக்குடி பகுதிக்கு ஒரு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் ரூ. 3.72 இலட்சம் செலவில் அங்கீகரிக்கப்பட்டு, நடப்பு நிதியாண்டில் எடுத்துக் கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அந்தத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு, ஏறத்தாழ 4, 5 மாதங்களுக்கு மேல் ஆகிறது. இன்னும் அந்தப் பகுதியில் பணி தொடங்கப்பட வில்லை என்பது பெரும் குறையாக இருக்கிறது. எனவே, விரை வாக அந்தப் பணியைத் தொடங்குவதற்கு அரசு ஆணை பிறப் பிக்குமா என்பதோடு, குறும்பனைப் பகுதியில் 2 கிலோ மீட்டர் தூரத்திற்குக் குடிநீர்க் குழாய்களில் எல்லாம் கசிவு ஏற்பட்டு உள்ளது என்று விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அவற்றை கவனத்தில் கொண்டு, இக் குடியிருப்புக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கத் திட்ட மதிப்பீடு தயாரித்து வருகிறோம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். திட்ட மதிப் பீடு தயாரிப்பதாகவும் தெரியவில்லை. குறும்பனைப் பகுதி மக்களுக்குக் குடி நீர் கிடைப்பதாகவும் தெரியவில்லை. எனவே,

உடனடியாக இந்தப் புதிய குடிநீர்த் திட்டம் தயாரிக்கவும் அந்தப் பகுதிக்குக் குடிநீர் வழங்கவும் அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, வாணியக்குடியிலும், குறும்பனையிலும் தற்போது வேலைகள் எடுத்துக் கொள்ளக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதற்காகத் தக்க முறையில் அரசு அதிகாரிகளுக்கு ஆணைகள் பிறப்பித்து, தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், சைமன் காலனிப் பகுதிக்கு நீர் வழங்கும் திட்டம், உருவாக்கப்பட்டு, 20 வருடங்களுக்கு முன்னால் மீன்வளத் துறையினரால் நிறைவேற்றப்பட்டு உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இத் திட்டத்தை மீண்டும் பராமரிக்க மீன் வளத் துறையிடம் கொடுக்கப்பட்டுள்ளதென கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மீன் வளத் துறையினர் பராமரிக்க ஊராட்சியிடம் ஒப்படைக்கிறோம் என்று சொல்லி, பராமரிப்பு நீண்ட காலமாகவே குறைவாக இருந்து வருகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். 20 வருடங்களுக்கு முன்பு நிறைவேற்றப்பட்டுள்ள திட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்திற்கு ஆதாரமாக உள்ள கிணறுகள், சுவர்கள் எல்லாம் பழுதடைந்து அருகிலுள்ள சாக்கடை நீரும், கிணற்று நீரும், ஒன்றாகக் கலந்து விடுகின்றன. ஏறத்தாழ 2 கிலோ மீட்டர் செல்கின்ற குழாய்கள் அனைத்தும் பழுதடைந்து விட்டன. கடற்கரை கிராமமாக இருக்கிற காரணத்தால், அப் பகுதி மீனவர்களுக்குப் பாதுகாக்கப்பட்டக் குடிநீருக்கு வேறு எந்த வசதியும் வழி வகையும் இல்லாததால், அவர்களுக்குக் குழாய்களில் வருகின்ற சாக்கடை நீரைத்தான் குடிநீராகப் பயன்படுத்த வேண்டிய நிலையுள்ளது. இதனால் அப்பகுதியில் காலரா போன்ற நோய்கள் பரவுவதற்கு வாய்ப்பும் உள்ளது. எனவே, அப்பகுதியின் தேவையைக் கருதி, புதிய திட்டம் ஒன்றை உருவாக்க அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அந்தக் குடிநீர்த் திட்டத்தில் சாக்கடை நீர்கலப்பதாகச் செய்தி ஒன்றும் அரசுக்கு இல்லை. ஆனால், மீன் வளத் துறை 20 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக இந்தத் திட்டம் சரிவர செயல்பட அரசு ஆவன செய்யும்.